**நீதித்துறை உட்கட்டமைப்பு பராமரிப்பு நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் - 2015**

---

நீதித்துறை உட்கட்டமைப்பு பராமரிப்பு நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, திரண்ட நிதியத்திலுள்ள மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்க தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2007 யூலை 17 ஆம் திகதிய நம்பிக்கை பொறுப்பு உறுதியின் 22 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறிப்பிட்ட நிதிக்கூற்றுக்கள் மீதான என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுக் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நீதித்துறை உட்கட்டமைப்பு பராமரிப்பு நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கமைய நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,258,965 தொகையான நடைமுறைக் கணக்கின் மீதி, நிலையான வைப்பொன்றாக ஐந்தொகையிலும் நிலையான வைப்புக்களில் முதலீடாக காசுப்பாய்ச்சல் கூற்றுக்களிலும் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 2007 யூலை 17 ஆந் திகதிய நிதிய நம்பிக்கை பொறுப்பு உறுதியின் 18 ஆம் பிரிவு | நம்பிக்கைப் பொறுப்பாளர்களின் கூட்டம் ஆகக் குறைந்தது ஒரு மாதத்திற்கு இரு தடவைகள் நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டில் 03 கூட்டத் தொடர்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன. |
| (ஆ) | 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை 3.2 (ஆ) பந்தி | நிதியத்தின் மிகைப் பணம் தாமதமின்றி திரட்டு நிதியத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக ரூபா 3,258,965 தொகையான மிகைப் பணம் 03 நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக நிதியத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 2,354,320 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 7,869,167 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 10,223,487 தொகையான அதிகரிப்பொன்று காணப்பட்டது. அரசாங்கத்தின் மானியம் ரூபா 8,000,000 இனால் அதிகரித்தமை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளின் பராமரிப்பு செலவினம் ரூபா 1,955,393 இனால் குறைவடைந்தமை இந்த அதிகரிப்பிற்கு பிரதான காரணங்களாக இருந்தன.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இந்த நிதியம் 2007 யூலை 17 ஆந் திகதிய நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் மூலம் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் 1(A) இன் பிரகாரம் நீதிமன்ற உத்தியோகபூர்வ விடுதிகள், ஆவணக் காப்பகங்கள், வழக்குப் பொருள் அறை, நீதிபதிகளின் அறைகள், பதிவாளர் அலுவலகம், நீதிபதிகளின் நூலகம் மற்றும் மேற்கூறப்பட்ட வளாகத்திற்குரிய பொது இடங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் பராமரித்தல், மேற்கூறப்பட்ட வளாகத்திற்குரிய தகவல் தொழில்நுட்ப வசதிகள், அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடப் பொருட்கள் என்பவற்றை வழங்குதல் பிரதான பணிகளாக இருந்தன. எனினும் மீளாய்வாண்டின்போது ரூபா 12,344,558 பெறுமதியான கணனிகள், உப பாகங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் ஏனைய நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பில் நிதியம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(ஆ) நீதிமன்றங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக மீளாய்வாண்டின்போது நீதி அமைச்சிலிருந்து நீதிமன்ற நிர்வாக செலவினத் தலைப்பு 228 இலிருந்து ரூபா 814,000,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. இந்த செயற்பாடுகளுக்காகவும் நீதி அமைச்சிலிருந்து 110-1-2-2201(03) ஆம் செலவின விடயத்தின் கீழ் இந்த நிதியத்திற்காக நிதிஏற்பாடு வழங்கப்பட்டு மீளாய்வாண்டில் ரூபா 12,344,558 தொகை கணனி உபபாகங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் என்பவற்றைக் கொள்வனவு செய்வதற்கு செலவிடப்பட்டிருந்தது.

**4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

மீளாய்வாண்டின் ஆகஸ்ட் மற்றும் திசெம்பர் மாதங்களின் மாத்திரம் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கும் போது முழுமையான வருடத்திற்காகவும் பதிற்கடமை அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நியமனங்களுக்காக படிகளாக ரூபா 226,198 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**4.3 நிதியத்தின் குறைந்த பயன்பாடு**

2014 ஆம் ஆண்டின் அமைச்சிலிருந்து அரசாங்க மானியமாக நிதியத்திற்கு வழங்கப்பட்ட பணத்தில் எஞ்சிய ரூபா 883,863 தொகை 2015 ஆகஸ்ட் 27 வரை விளைவற்றுக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டில் அமைச்சிலிருந்து மானியமாகக் கிடைத்த ரூபா 15,000,000 தொகையில் 21.7 சதவீதமான ரூபா 3,258,965 தொகை 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நோக்கத்திற்காக செலவிடப்படாது நடைமுறைக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் 2016 மார்ச் 11 ஆந் திகதி மூன்று நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்**

நம்பிக்கைப் பொறுப்பின் நோக்கம் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்வதற்காக மீளாய்வாண்டின்போது மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளுக்காக செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.2 உள்ளகக் கணக்காய்வு**

2009 ஆம் ஆண்டு முதல் நிதியத்தின் பணிகள் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**5.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

நிதியத்தின் ஆரம்பம் முதல் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை.